1987 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள். விவரம் கேட்டால்தான் அமைச்சர் பதில் சொல்வார். இல்லையென்றால் நடவடிக்கை எடுக்கும்படி பெட்டிஷன் எழுதிக் கொடுங்கள்.

திரு. சா. ஜெயச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, 3 மருத்துவர்கள் ஆதிதிராவிடர்களைத் தொட்டுகூட வைத்தியம் பண்ணுவது கிடையாது. சரியான நேரத்தில் வருவது கிடையாது. காரணம் அந்த மருத்துவமனையில் பணிபுரிவதற்கு விருப்பம் இல்லை என்று நினைக்கிறேன்....... (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நேற்று நடந்த மானிய கோரிக்கையில் பேசவேண்டியதை உறுப்பினர் அவர்கள் இப்போது பேசுகிறார். என்ன வேண்டும் என்று கேள்வியாக கேளுங்கள். உண்டா இல்லையா என்ற இரண்டில் ஒரு பதில் கிடைக்கும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் என்ன கேட்க விரும்புகிறார் என்று என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. மருத்துவர்கள் வரவில்லை, மருந்து சரியாக கொடுக்கப்படவில்லை, ஆதிதிராவிடர்களைத் தொட்டு வைத்தியம் பார்ப்பதில்லை. ஒரு மணிக்கு உறுப்பினர் சென்றபோது மருத்துவர் வரவில்லை. இவற்றைப்பற்றி நான் தவறானத் தகவலைத் தரவில்லை. எனக்குக் கொடுக்கப்பட்ட தகவலிலிருந்துதான் கொடுத்தேன். உறுப்பினர் அவர்கள் விவரமாக எழுதிக் கொடுப்பார்களானால் நிச்சயமாகச் சொல்கிறேன், கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும். ஆதிதிராவிடர்களை எந்த அதிகாரியாவது தொட்டு வைத்தியம் பார்க்கவில்லையென்று நிரூபிக்கப்படுமேயானால், அவரைப் பதவி நீக்கம் செய்வதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது.

(ஊ) விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர சிகிச்சை.

*திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''விபத்து காலங்களில் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனையில் சேர்க்கும்போது சட்டபூர்வமான சடங்குகளுக்கு முதலிடம் கொடுத்து மருத்துவ சிகிச்சையினை இரண்டாம்பட்சமாக நடத்துவதால் பாதிக்கப்படுகிற பொதுமக்களது கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

[திரு. ப. உ. சண்முகம்] [1987 ஏப்ரல் 24

அறிக்கை.

விபத்தினால் காயமுற்றவர்கள் பிறரால் தாக்கப்பட்டு காயமுற்றவர்கள், தற்கொலை முயற்சி செய்ய முற்பட்டு பாதிக்கப்பட்ட ஆகியோர் அவசர சிகிச்சைக்கு அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும்பொழுது அவர்களை சட்டம் சார்ந்து மருத்துவ கேசுகளாக (Medico legal cases) கருதப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்கள் சட்டம் சார்ந்த மருத்துவ பிரிவில் வந்தாலும் உடனடிக் கவனிப்புக்குரியவர்களாயிருப்பின் எந்தவித தாமதமும் இன்றி அவர்களுக்கு சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. அவசரத் தன்மை நீங்கியவுடன் மற்ற நடைமுறைகள் பின்பற்றப்படுகிறது.

2. சட்டம் சார்ந்த மருத்துவ கேசுகளை கையாள வேண்டிய நடைமுறைகளை அறவே விட்டொழிக்க இயலாது. இந்த கேசுகளை உடனுக்குடன் கவனிக்க வேண்டியுள்ளது. குறிப்பாக இது போன்ற கேசுகள் அனுமதிக்கப்பட்டவுடன் நோயாளிகள் நிலைமை பற்றிய சான்றுகள் உடனுக்குடன் தயாரிக்கவேண்டியுள்ளது. இந்த சான்றுகள் காவல் துறையின் குற்றவியல் புலனாய்வு செய்வதற்கும் விபத்துக்குள்ளானவர்களுக்கு நஷ்ட ஈடு கோருவதற்கும் மிக முக்கியமான சான்றாக அமைகிறது. இந்த சான்றுகளுக்கு சட்ட ரீதியிலான முறைகளை அனுசரிக்கும் அதே நேரத்தில் மருத்துவர்கள் செவிலியர்கள் மற்றும் ஏனைய பணியாளர்கள் நோயாளிக்கு தேவைப்படும் சிகிச்சை அளித்து கொண்டுதான் இருப்பார்கள். சுய நினைவின்றி உள்ள நோயாளியை சுய நினைவிற்கு கொண்டு வருவதற்கு வேண்டிய எல்லா சிகிச்சை முறைகளும் கையாளுவார்கள்.

3. எனவே மருத்துவ சிகிச்சையை விட சட்ட ரீதியான முறைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது என்று கூறுவது முற்றிலும் தவறானது.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே மருத்துவச் சிகிச்சையை விட சட்ட ரீதியான முறைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது என்று கூறுவது முற்றிலும் தவறு என்று சொல்லப்பட்டு இருக்கிறது. நான் அறிந்த வரையில் நிச்சயமாக மதுரை மருத்துவமனையைத் தவிர, மற்ற அனைத்து மருத்துவமனைகளிலேயும் சட்டரீதியான சடங்குகளுக்கே முன்னுரிமை தரப்படுவதை நான் நேரடியாகப் பல நேரங்களில் கண் கூடாக கண்டிருக்கிற வாய்ப்பைப் பெற்று இருக்கிறேன். எனவே, அந்த சட்டரீதியான சடங்குகளுக்கு முதலிடம் தராமல் மனிதாபிமானத்திற்கு முதலிடம் தந்து அந்த சிகிச்சையைத் தந்து காயப்பட்டவர்களை விபத்துக்குள்ளான

1987 ஏப்ரல் 24] [திரு. க. சோலைராசு]

வர்களைக் காப்பாற்றியதற்குப் பிறகு அந்த சடங்குகளை வைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைவுபடுத்துகிற ஒரு சுற்றறிக்கையையாவது அனைத்து மருத்துவமனைகளுக்கும் அரசு அனுப்புமா ? இன்றைக்கு தனியார்களுக்கு முதலுதவி சிகிச்சைக்கான சான்றிதழ் வழங்கலாம் என்ற ஒரு உரிமை தனியார் மருத்துவமனைகளுக்கு நகரங்களில் ஆங்காங்கு ஒரு சிலருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் விபத்துக் காலங்களில் மற்ற அவசரக் காலங்களில் காயப் பட்டவர்களைத் தனியார் மருத்துவமனைகளில் பார்க்கலாம் என்று சொல்லி சில புகழ் பெற்ற மருத்துவமனைகளுக்கு சான்றிதழ் வழங்கப்படுமா ? அதோடு ஆங்காங்கே விபத்துக் காலங்களில் பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக காப்பாற்ற ஆரம்ப சுகாதார நிலையங்களால்கூட, அப்படிப்பட்ட முதலுதவி சிகிச்சை அளித்த பிறகு அவர்களை மற்ற மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்களா என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே சட்டத்தைப் பற்றி பின்னால் தான் பார்க்க வேண்டும். முதலில் மருத்துவம் செய்யவேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். அப்படி எங்காவது தவறாக இருக்கிறது என்றால் மாண்புமிகு உறுப்பினர் எழுதிக் கொடுத்தால் அதைப் பற்றி நடவடிக்கை எடுக்கலாம். தனியார்களுக்கு விபத்துக் களைப் பற்றி சர்ட்டிபிகேட் சான்றிதழ் கொடுக்கிற உரிமையை வழங்குவதில்லை. கொடுக்க முடியாது. காரணம் அது காவல் துறையில் இருந்து வாங்கவேண்டியது. அரசுத் துறையில் கொடுக்கப்படுகிற சான்றிதழ்களுக்கே சில நேரங்களில் சட்டப் பிரச்சினை வந்து நீதிமன்றத்தில் கேள்வி கேட்கிறபோது தனியார்ளுக்கு அந்த உரிமை வழங்கிவிட்டால் வேறு குழப்பம் ஏற்படும்.

(எ) ஜவ்வாது மலை புதூர் நாட்டிற்குப் போக்குவரத்து வசதி நிறுத்தப்பட்டது குறித்து.

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''வடாற்காடு மாவட்டம் ஜவ்வாது மலை, புதூர் நாட்டிற்கு திருப்பத்தூரிலிருந்து இயங்கி வந்த பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக பேருந்து நிறுத்தப்பட்டதால் அப்பகுதி மலை வாழ் பழங்குடி மக்கள் படும் இன்னல்கள் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.